*Summaries in Tamil*
*Intervention 2013, Volume 11, Number 2, Page 222 - 224*

# Summaries in Tamil

## சிறுவர் சிநேக இடங்கள் (**Child friendly spaces)**: வெளிப்பாடுகள், தாக்கங்கள் என்பவற்றின் அடிப்படையில் தற்பொழுது உள்ள சாட்சியங்களின் முறையான மீழ்பார்வை

***Alastair Ager, Janna Metzler, Marisa Vojta & Kevin Savage***

சிறுவர் சிநேக இடங்கள் என்பது அவசரகால நிலமைகளில் சிறுவர்களை ஆபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் ஒரு பொறிமுறையாகவும் சிறுவர்களின் உளசமூக நன்னிலையைப் பேணவும் சிறுவர் பாதுகாப்பிற்கான பலத்தை சமூக மட்டத்தில் வளர்ப்பதற்கான அடிப்படையாகவும் பரவலாகப் பாவிக்கப்படுகிறது. உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட கட்டுரைகள், உத்தியோகபூர்வமில்லாத கட்டுரைகளை ஆராய்ந்த போது 10 கற்கைகள் தெளிவான உள்வாங்குதலுக்கான விதிமுறைகளைப் பூர்த்தி செய்திருந்தன. ஒவ்வொரு கற்கையும் அதன் பாதுகாப்பு, அபிவிருத்தி, இடையீடுகளின் வெளிப்பாடு என்பவற்றின் அடிப்டையில் மதிப்பிடப்பட்டன. குறிப்பிட்ட 10 கற்கைகளும் சிறுவர்களுக்குச் சாதகமான இடங்களின் நேரா பலன்களை, குறிப்பான உளசமூக நலன் தொடர்பான பலன்களை அறிக்கையிட்டுள்ளன. எனினும், திட்டமிடலிலும் திடீர் மாற்றங்களை நாளடைவில் ஏற்படுத்துவதிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. 3 கற்கைகள் மட்டுமே செயற்திட்டத்திற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட திட்ட வரைபைப் பற்றிக் கூறுகின்றன. 2 கற்கைகள் மட்டுமே இவ்வாறான செயற்திட்டங்கள் இல்லாத சமூகங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துள்ளன. மதிப்பிட்டில் தெரிய வருவது: ஆவணப்படுத்தல், வெளிப்பாடுகளை அளவிடுதல் என்பவற்றில் அதிக கவனம் தேவைப்படுகிறது, சிறப்பாகத் தரப்படுத்தப்பட்ட நடைமுறை, வெளிப்பாடு, வெளியீடு என்பவற்றை மதிப்பிடும் முறைகள் தேவை, மதிப்பீட்டில் பிள்ளைகளை இணைத்தல் அவசியப்படுகிறது, ஆதாரபூர்வமான இடையீடுகளை வரையறுக்கவென நீண்ட காலப் பின் தொடர் செயற்பாடுகள் (follow up)அவசியம்.

முக்கிய சொற்கள்: சிறுவர்சிநேக இடங்கள் (CFS), உளசமூகம், சிறுவர் பாதுகாப்பு, மதிப்பீடு, வெளிப்பாடு, மனிதாபிமானம், அவசரகாலம்

## வட உகண்டாவில் பலவந்தப்படுத்தப்பட்டுத் தாயானவர்களின் அனுபவங்கள்: யுத்தத்தின் சுவடுகள்

***Grace Akello***

வடக்கு உகண்டாவில் 1986-2007 வரை லோர்ட்ஸ் றெஸிஸ்டன்ட் ஆர்மி பொது மக்களின் மேல் பாரபட்சம் காட்டல், கொலைகள், பிள்ளைகளைக் கடத்தல் எனப் பல கொடுமைகளை இழைத்து வந்தது. கடத்தப்பட்ட பிள்ளைகள் அனைவரும் ஆயுதங்களைக் கையாளப் பயிற்றப்பட்டதுடன் பெண் பிள்ளைகள் இராணுவத்தின் கொமாண்டர்களுக்குப் பலவந்தமாக மனைவிகளாகப் பரிமாறப்பட்டனர். இவ்வாறு மனவடுவிற்கு உள்ளாக்கப்பட்ட பெண் பிள்ளைகளும் இளம் பெண்களும் (கர்ப்பிணிகளும் பலவந்தப்படுத்தப்பட்ட தாய்மார்களும்)புனர்வாழ்வு நிலையங்களில் மற்றப் போராளிகளிலும் அதிகமான காலம் நிறுத்தி வைக்கப்பட்டனர். நிலையங்களில் அவர்களுக்கு விசேட கவனிப்புக் கிடைத்தாலும் சமூகத்தில் ஒன்றிணைக்கப்பட்ட பின் குடும்பங்களும் சமூகமும் அவர்களையும் அவர்கள் பிள்ளைகளையும் விலக்கி வைத்தனர். இக் கட்டுரையானது பலவந்தப்படுத்தப்பட்டுத் தாயானவர்கள், அவர்களது பிள்ளைகளின் அனுபவங்களை ஆராய்கிறது. அதற்கு மேலாக, சமூகங்கள் எவ்வாறு அவர்களைப் பல மனித உரிமை மீறல்களிலிருந்து உயிர் பிழைத்தவர்கள் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கத் தூண்டப்பட வேண்டும் என்றும் ஆராய்கிறது.

முக்கிய சொற்கள்: பலவந்தப்படுத்தப்பட்ட தாய்மை, உளசமூகத் தேவைகள், பிள்ளைகள், மீழ் ஒருங்கிணைப்பு, உகண்டா

---

## பொதுத் தொடர்: பால் நிலை சார் வன்முறையிலிருந்து உயிர் பிளைத்தவர்களுக்கான மீட்புத் திட்டம் ஒன்று

***Rachel A. Cohen***

பால்நிலை வன்முறையிலிருந்து பிழைத்துக்கொண்டவர்களுக்கான பல கோணங்களைக்கொண்ட செயற்திட்டம் ஒன்று இக்குவாடோரின் லாகோ அக்றியோவிலும் அதனரிகிலுள்ள கொலம்பிய



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

அகதிகளுக்கான மீள்குடியமைப்பிலும் பரீட்சார்த்தமாக நடைபெற்றது. உள்நாட்டைச் சேர்ந்த இலகுபடுத்துனர்கள் சிறிய பெண்கள் குழுக்களுடன் வேலை செய்வதற்குப் பயிற்றப்பட்டனர். பெண்களின் கையினால் செய்த தையல் வேலைகளைச் சேகரிக்கும் திட்டத்தில் வரைதல் மூலம் குணப்படுத்தல், உளவியற் கல்வி, சகபாடிகளின் ஆதரவு, நோக்குறிகளைக் குறைத்தல், உளசமூகத் திறன் விருத்தி என்பனவும் சேர்க்கப்பட்டுள்ளன. பங்குபற்றுனரகள் வடிவமைத்துத் தைக்கும் கதைகூறும் வகையில் அமைந்த ஆடைகள் (இலத்தீன் அமரிக்காவில் ஆப்பிலரிஸ் என அழைக்கப்பம்) அவர்களின் அனுபவங்களையும் ஞபகங்களையும் வெளிக்கொண்டுவருகின்றன. இத் திட்டத்தின் உருவாக்கம், செயல்பாடு என்பவற்றை இக் கட்டுரை தருகிறது.

முக்கிய சொற்கள்: பால்நிலை அடிப்படையிலான வன்முறை, வரைதல் மூலம் குணப்படுத்தும் குழுச் செயற்பாடு, பிரச்சினைக்கு முகம்கொடுக்கும் யுக்திகள், கதைகூறும் ஆடைகள்

---

நேபாளத்திலிருக்கம் பூட்டானிய அகதிகளுக்கான உளசமூக உதவி

***Relinde Reiffers, Ram Prasad Dahal, Suraj Koirala, Renee Gerritzen, Nawaraj Upadhaya, Nagendra Luitel, Shaligram Bhattarai & Mark Jordans***

20 வருடங்களுக்கும் மேலாக ஆயிரக்கணக்கான பூட்டான் அகதிகள் நேபாளத்தின் கிழக்குப்பகுதி முகாம்களில் நிரந்தரமற்ற கடுமையான சூழ்நிலையில் தங்கியுள்ளனர். இப்பொழுது, மீழ்குடியமர்த்தல் சாத்தியமாகும் என்ற நிலையில் மேலும் பல சவால்களை இவர்கள் எதிர்கொளள்கின்றனர். இதனை அவதானித்த *Transcultural Psychosocial Organisation* என்ற அரச சார்பற்ற நிறுவனம் UNHCR மற்றும் வேறு சில நிறுவனங்களுடன் இணைந்து இம் மக்களுக்கு உளவளத்துணை வழங்கிவருகிறது. இக் கட்டுரையில் கொடுக்கப்பட்ட இடையீடுகள், சாவால்கள், உளசமூகப் பிரச்சினைகள், கற்றுக்கொண்ட விடையங்கள் என்பன கொடுக்கப்படுகின்றன. அத்துடன் அகதியாயிருக்கும் ஒருவரின் சம்பவக் கற்கையும் இணைக்கப்பட்டுள்ளது. அகதிகளுக்கு மட்டுமல்லாது, அகதிகள் இருந்த பிரதேச மக்கள், மனிதாபிமான வேலை செய்பவர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட இத் திட்டத்தில் நேரடி உளசமூக உதவி, உளவியல் கல்வி, இயலுமை விருத்தி என்பவை முக்கிய பங்கு வகிக்கின்றன. பரிந்துரைகளாவன: அகதிகளுக்கும் அப் பிரதேச மக்களுக்கும் தொடர்ந்தும் சேவைகளை வழங்கல், ஆபத்து நிலையிலிருக்கும் குழுக்கள் மேல் கவனம் செலுத்தல் (வயதானவர்கள் போன்றோர்), மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் சேவைகளுடன் தொடர்புகளைப் பலப்படுத்தல்.

முக்கிய சொற்கள்: பூட்டானிய அகதிகள், நேபாளம், உளசமூகம், சேவை நீடிப்பு, மீளக்குடியமர்த்தல்

---

மனதாபிமான செயற்திட்டங்களின் உளசமூகக் கூறை மதிப்பிடல்

***Anonymous***

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் முகாங்களிலும் மீள்குடியமைப்புத் திட்டங்களிலும் உளசமூக சேவையில் ஈடுபட்ட ஒழு குழுவினரின் செயற்பாடுகளை எழுத்தாளர் மதிப்பிடுகிறார். அவர்களின் செயற்பாடுகள் உள்ளுணர்வு, பொது அறிவு என்பவற்றின் அடிப்படையில் அமைந்தனவே அன்றித் தெளிவான குறிக்கோள்களோ அக் குறிக்கோள்களுடன் தொடர்புடைய அணுகுமுறைகளோ இருக்கவில்லை. அதே வேளை முகாமின் பௌதீகச் சூழலில் உள்ள தாக்கங்களை, குறைபாடுகளை அவர்கள் ஆராயவில்லை. இவ் விடையங்கள் ஒரு சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டு, இறுதியாக இடையீடுகளுக்காக தர்க்கரீதியான ஒரு வரைபு தயாரிக்கப்பட்டது. இதில் செயல்திட்ட வெளிப்பாட்டை அறியும் வகையிலான உளசமூக செயற்பாடுகளுக்கான சுட்டிகளும், செயற்பாடுகளின் ஒரு தொகுதியும் சேர்க்கப்பட்டன. உளசமூகப் பணியாளர்கள் இது வரை பாவித்திராத திறன்களில் அவர்களைப் பயிற்சிப்பது எவ்வாறு செயற்திட்டத்தில் முன்னேற்றத்தைக் கொண்டுவரும் என்பதும் இதன் மூலம் தெளிவாகிறது.

முக்கிய சொற்கள்: உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் முகாம், மீள்குடியமைப்புப் பகுதி, இடையீடுகளுக்கான தர்க்கரீதியான வரைபு, சரிபார்க்கக் கூடிய சுட்டிகள், மதிப்பீடு



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

*Intervention 2013, Volume 11, Number 2, Page 222 - 224*

## ‘அனைத்துத் தடங்கல்களின் மத்தியிலும்’: ஈராக் அகதிகளுக்கும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த சிரியா நாட்டவர்களுக்கும் UNCHR இனால் வழங்கப்பட்ட உளசமூக உதவித் திட்டம்

***Sarah Harrison, Riwa Dahman, Maha Ismail, Edith Saada, Maysaa Hassan, Rasha Hassan, Adam Musa Khalifa & Marian Schilperoord***

யுத்தத்திலிருக்கும் நாடொன்றிலிருந்து நேர்க் கருத்துடைய கதைகளைக் காண்பது மிகவும் கடினமானது. மிகவும் மன நெருக்கடிக்குள்ளான மக்களுக்கு உளசமூக சேவை வழங்கிவரும் மனநலன் சேவையாளர்களின் அமைதியான நாளாந்த வாழ்க்கை பத்திரிகைச் செய்தியாகுவது மிகக் குறைவு. சிரியாவிலிருந்த ஈராக் அகதிகளுக்கென அவர்களின் வழங்கள் திறமைகளையே ஆதாரமாக வைத்து உளசமூக உதவித் திட்டமொன்றை *UNHCR* 2008 இலிருந்து நடைமுறைப்படுத்தியது. 2012 ல், இத் திட்டம் ஆயுத முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட சிரிய நாட்டவர்களுக்கு ஆதரவு வழங்க ஆரம்பித்தது. தனிப்பட்ட உதவி, குடும்பங்கள், சமூகங்களுக்கான ஆதரவு, கூட்டு வதிவிடங்களில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவி என்பன தொண்டர்களால் வழங்கப்படுகிறது.

முக்கிய சொற்கள்: சிரியா, ஆயுத முரண்பாடு, அகதிகள், உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள், தொண்டர்கள்

---

## இபோலா வைரஸ் கொங்கோ நாட்டில் பரவிய போது வழங்கப்பட்ட உளவியல் ஆதரவு

***Eva Paglia***

2007 ல் கொங்கோவில் இபோலா காச்சல் பரவியபோது வெளிநாட்டு உளவியலாளராக அங்கு தொழில் புரிந்த தனது அனுபவங்களை எழுத்தாளர் விபரிக்கிறார். சிகிச்சைகள் ஏதுமற்ற, விராவாகப் பரவக் கூடிய இந் நோயிலிருந்து தப்புவதற்கு நோயுற்றவரை மற்றவர்களிடமிருந்து விலத்தி வைப்பதே ஒரே வழியாகிறது. இது உள்நாட்டு மக்கள் மத்தியிலும் வெளிநாட்டு உளவியலாளர்கள் மத்தியிலும் வெவ்வேறு வகையில் வெளிப்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. எனினும் பல கொடுமையான நிகழ்வுகளைச் சந்தித்த மக்களும் உளவியலாளர்களும் பலமிளந்தவர்களாகவே உணர்கின்றனர்.

முக்கிய சொற்கள்: இபோலாக் காச்சல், கொங்கோ சோசலிசக் குடியரசு, உளசமூக இடையீடுகள், பல் கலாசார உளவியல்


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.